And now see what we have to do while studying for the examination. Revise or review your notes taken in the class or noted in the text books. Note down the important details or main ideas; make an intensive study of these study materials, test and refresh your memory about the ideas you had already learnt earlier. And there are lot of students who think that what to do before the day of exams. Never learn anything new on the eve of examination and revise only what you had already learnt. Make sure you have all your requirements did so this way just prepare yourself for the exams.

**K. THARANGINI**
**BIO-2022**

## என் வாழ்க்கை



அன்பிற்கு எல்லையாய் அன்னை
அரவணைத்து வளர்க்கின்றாள் என்னை
அறிவிற்கு சிகரமாய் தந்தை – அவர்
அறிவுரையால் சீரானது என் சிந்தை

கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள்
கல்வெட்டில் பொறிக்கப்பட வேண்டியவர்கள்
கலைகளை கற்பிக்கும் குருமார்கள்
கலைமகளின் உருவமாய் தோன்றியவர்கள்

எப்போதும் சூழ்ந்திருக்கும் சுற்றம்
எப்பிறப்பிலும் கிடைக்காத பாசபந்தம்
எங்கும் நிறைந்திருக்கும் நண்பர் கூட்டம்
எங்கு தேடினாலும் கிடைக்காத பூந்தோட்டம்

அன்பான தாய் தந்தை
அழகான குடும்பம்
அறிவார்ந்த குருமார்கள்
அரவணைக்கும் உறவினர்கள்
அக்கறையுள்ள நண்பர்கள்

எத்தனை அழகான வாழ்க்கை
எத்தனை பிறப்பிலும் கிடைக்காத பேறு
அத்தனை பேருக்கும் நன்றிகள் நூறு.

**D.ஜெபோனா**
**2023 வர்த்தகப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழ்மை கல்விக்குத் தடையல்ல

அழகிய மாலைப் பொழுதில் ஆலய தரிசனத்திற்காக குடும்பத்துடன் சென்ற வேளையில்......

சாலையோரத்தில் " **கீரை ஒரு கட்டு பத்து ரூபாய்** " என்ற பிஞ்சுக் குரலில் ஒரு கூடையில் கீரைக் கட்டுகளுடன் நின்றான் ஒரு சிறுவன். வறுமையின் விளைவினாலேயே கீரை விற்கிறான் என்ற எண்ணத்தில் அவனை நாடிய வேளையிலே **கீரை ஒரு கட்டு பத்து ரூபாய் எல்லாம் புதிய கீரை** என்றான் சிறுவன்.

அவன் குறித்து பல விடயங்களையும் வினவ மனம் வேண்டியது. அவனது தொழில் மற்றும் குடும்ப சூழ்நிலை பற்றி வினவினோம். அவனும் சந்தோசமாக ஆரம்பித்தான் தனது கதையை. நான் பாடசாலைக்குச் செல்கிறேன் பாடசாலை முடிந்து வந்து கீரை விற்கிறேன் இதன் மூலம் கிடைக்கும் பணத்தை கல்விக்காக செலவு செய்கிறேன். எனது வீட்டில் அம்மா, தங்கை, நான் மூவர் மட்டுமே தங்கை பிறந்ததுமே அப்பா இறந்து விட்டார்.

அம்மாவின் பராமரிப்பிலேயே நாங்கள் வாழ்கின்றோம். அம்மாவும் கூலித்தொழில் செய்கின்றார். அவரது வருமானம் எமது வீட்டுச் செலவிற்கே போதாது. அதனாலேயே நான் கீரை விற்கின்றேன். எனக்கு 15 வயது தங்கைக்கு 10 வயது. இருவரது பாடசாலைச் செலவுகளையும் ஈடு செய்ய அம்மாவால் முடியாது.

மலையடிவாரத்தில் விளையும் இக்கீரையினை பாடசாலை விட்டு வந்ததும் இருவரும் சேர்ந்து பறித்துக் கொண்டு வந்து சுத்தப்படுத்தி கட்டுகளாகக் கட்டிக்கொண்டு வீதியில் வந்து நிற்பேன். இரவாகும் வரை நின்று விற்றால் ஒரு 300 ரூபாய் கிடைக்கும். அதனை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தாது சேமித்து வைத்து கல்விக்காகவே பயன்படுத்துவேன்.

எதிர் காலத்தில் சிறந்த ஒரு வைத்தியராக வேண்டும் என்பதே எனது கனவு. அதற்காக எத்தனை இடைஞ்சல்கள் வரினும் அனைத்தையும் எதிர் கொண்டு முன்னேறுவேன். எனது தங்கையையும் ஒரு சிறந்த இடத்திற்கு கொண்டு வருவேன். என்றவாறே அம்மா உங்களிடம் மெய் மறந்த நிலையில் என் சோகக் கதையை கொட்டித் தீர்த்ததில் நேரம் போனதே தெரியவில்லை. எனது அம்மா தேடப் போகிறார் மீண்டும் ஒரு நாள் சந்திப்போம் நான் சென்று வருகிறேன் என்று கூறிச் சென்ற சிறுவனை இமை வெட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றேன். தோளில் தட்டிய அப்பா நாங்களும் செல்வோம் என்றார்.

இதிலிருந்து வறுமையை ஒரு காரணமாகக் காட்டி கல்வியை இடை நிறுத்துபவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் ஏழ்மை கல்விக்கு ஒரு போதும் தடையல்ல நமது இலக்கினை அடைய விடாது பல தடைகள் வந்த வண்ணமே இருக்கும் அவற்றை எதிர் கொண்டு நமது இலக்கை அடைய வேண்டும்.

கல்வி கற்பதற்குப் பணம் இல்லை பணம் மட்டும் இருந்திருந்தால் நான் சிறந்த சாதனையாளராக வந்திருப்பேன் எனக் காரணம் கூறும் மனிதர்கள் பலரே எம்மைச் சூழ்ந்துள்ளனர்.

உலகம் அபிவிருத்திப் பாதையில் பயணித்துக் கொண்டிருப்பினும் பல கிராமங்கள் இன்றும் பின் தங்கியே காணப்படுகின்றன. அங்குள்ள மக்கள் ஒரு சிறிய வட்டத்திற்குள்ளேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

**"தடைகள் பலவற்றினையும் தாண்டி சாதனை படைத்தவர்களையே உலகம் போற்றும்"**

**கெ. கோபிகா**
**2023 கணிதப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ☙ தமிழ்

நேற்றைய தளிர்கள் இன்றைய
இலைகள் ஆகலாம்
இன்றைய இலைகள் நாளைய
சருகுகள் ஆகலாம்........

சருகுகள் விழுந்தாலும்
குப்பைகள் அல்ல
ஏதிர் கால தளிர்களுக்கு
நாளைய உரமாகலாம்...

மோழி முதுமையடையலாம்
அதன் முதுமை குறைவதில்லை
காலங்கள் கடந்து செல்லலாம்
முதுமைகள் நாளைய புதுமையாகலாம்

அதனால் முதுமொழியும் நாளை
முதன்மையாகலாம்

வடிவங்கள் மாறினாலும் உணர்ச்சிகள்
மாறாது
அன்றும் இன்றும் என்றும் தழிழின்
இனிமை குறையாது......
என் உணர்ச்சிகளுக்கு உயிர் கொடுக்கும்
தமிழுக்கு என்றும் அழிவில்லை என
எண்ணங்களை எழுத்துக்களாக்க
வடிக்கிறேன் தமிழன்னையின்
சிலையை......

---

## ☙ மாணவர் சிந்தனைக்காக சில............

- பரீட்சை என்பது கடுமையான ஆசிரியர். காரணம் அது முதலில் பரீட்சை வைக்கிறது பின்னர் தான் பாடம் கற்பிக்கிறது.
- நல்லவர்களோடு நட்பாய் இருங்கள். நீங்களும் நல்லவராய் இருங்கள்.
- பயம் தான் நம்மை பயமுறுத்துகிறது. பயத்தை உதறி எறியுங்கள்.
- சுமக்கத் தெரிந்து விட்டால் சுமைகள் சுலபம். சாதிக்கப் பழகி விட்டால் தடைக்கல்லும் படிக்கல்.
- உங்கள் எதிரிகளை கவனியுங்கள். அவர்களே உங்கள் குற்றங்களை முதலில் கண்டு பிடிப்பார்கள்.
- நீங்கள் எந்த அளவிற்கு தன்னம்பிக்கையுடன் இருக்கிறீர்களோ அந்த அளவிற்கு வாழ்க்கையில் உயரலாம்.
- நீங்கள் உண்மையிலேயே வாழ்க்கையை விரும்புகிறீர்கள் என்றால் நேரத்தை வீணாக்காதீர்கள். நேரங்களால் உருவானதே வாழ்க்கை.
- கல்வி அழியாச் செல்வம் தான். ஆனால், அழியும் செல்வங்களை இழந்தால் தான், இந்த அழியாச் செல்வத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.
- போட்டியும், பொறாமையும், பொய்ச்சிரிப்பும் நிறைந்த இவ்வுலகில் நம் பாதையில் நேராக நடந்து செல்ல நமக்குத் துணையாக இருக்கக் கூடியது கல்வி மட்டுமே.
- தேடல் நிறைந்த உலகில் விரும்பிக் கற்றுக் கொள்வதே நல்லது.

**திருமதி.தமயந்தி கெங்காதரன்**
**பகுதித்தலைவர் - ( தரம் 8, 9 )**
**தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஃ தொழிநுட்பப்பாடத்தை ஏன் தெரிவு செய்ய வேண்டும்?

கோட்பாட்டு அறிவினை விட "செயல்முறை" ஆற்றல் உள்ள இலங்கை மாணவர்களுக்கு ஏற்றதாகக் கல்வித் துறையில் தற்போது முக்கியமான மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால்தான் க.பொ.த உயர்தரப் பிரிவுக்கு தொழில்நுட்பப் பாடத்துறையை 2013ஆம்ஆண்டில் அறிமுகம் செய்ததாகும்.க.பொ.த சாதாரண தரத்தில், 9A உயர்தர வகுப்பில் 3A பெறும் மாணவர்களுக்கு மாத்திரமல்ல. அறிவு, செய்முறைப் பயிற்சி ஆகிய இரண்டையும் கொண்ட அதற்கு மேலாக முயற்சி, தைரியம் மற்றும் அர்ப்பணிப்பும கொண்ட இலங்கையின் மைந்தர்களுக்குப் புதிய பாதை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

மாணவரொருவர் சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானம் உள்ளிட்ட ஆறு பாடங்களில் யாதெனும் மூன்று பாடங்களில் திறமைச் சித்திகள் பெற்றிருந்தால் க.பொ.த உயர்தர வகுப்புக்காக தொழில்நுட்பப் பாடத்துறையைத் தெரிந்து கொள்ள முடியும்.சாதாரண தரத்தின் பெறுபேறுகளை விட மாணவர்களில் பொதிந்துள்ள ஆற்றல் மீது இதன் போது அதிக நம்பிக்கை வைக்கப்படுகின்றது..உண்மையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் பெற்றுக் கொள்ளும் கோட்பாட்டு அறிவோடு ஒப்பிடும் போது அதற்கு இணையான அறிவோடு கைப்பயிற்சி கொண்டு, சிந்திப்பதோடு மட்டுமல்லாமல் செயற்படவும் கூடிய சரியான கல்விமானாக திகழ்வதற்கு இந்தத் தொழில்நுட்பப் பாடத்துறையைத் தெரிவு செய்து கொள்ள முடியும்.

மேலும் சற்று அர்ப்பணிப்பு இருப்பின் காலக்கிரமத்தில் பட்டம், பட்டப்பின் பட்டங்களைப் பெற்று பேராசிரியர்களாக விளங்க முடியும்.ஆனால் சுவரில் ஆணி அடிக்கக் கூட முடியாத பேராசிரியர்களாக அல்ல. அவர்கள் வேலையும் தெரிந்த, கோட்பாடும் தெரிந்த வியர்வையின் பெறுமதியும் அறிந்த சிறந்த மனிதர்களாவர். ஆனால் இதனைப் பெற்றுக் கொள்வது ரோசாப் பூக்கள் தூவப்பட்ட விளையாட்டு வீதியூடு செல்வதூடாக அல்ல. தொழில்நுட்ப உலகத்துள் நுழைய தொழில்நுட்பமும் தேர்ச்சித் திறனும் தேவை.

இந்தப் பாதை ஆரம்பமாவது சிறிது மாற்றத்தோடு கூடியதாகவாகும். நாம் கோட்பாடுகளைக் கற்றுக் கொள்வதோடு வேலை உலகம் குறித்தும் கற்றுக் கொள்வோம். அது மனித குலம் வாழ வேண்டிய சிறப்பான உலகத்தை உருவாக்கும். ஆகவே நாம் தொழிநுட்பவியலாளர்களாகுவோம். இந்தப் பாடத்துறையானது திட்டமிடப்பட்டு நடைமுறைபப்டுத்தப்படுவது கல்வி அமைச்சினால் மட்டுமல்ல. இதற்காக இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்விருத்தி அமைச்சு அதிகளவில் உதவியளிக்கின்றது.

இரண்டு வருடங்கள் பூர்த்தியடைந்ததும் மூன்று பாடங்களுக்கும் கோட்பாட்டு அறிவுக்கான பரீட்சை நடாத்தப்படும். ஆனால் பொறியியல் மற்றும் உயிர்முறைமை தொழில் நுட்பப் பாடங்களுக்கு கோட்பாடுகள்சார்ந்த பரீட்சைகளில் பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகள் 75% மாகவும் மீதி 25% புள்ளிகள் பெற்றுக்கொடுக்கப்படுவது பிரயோகப்பரீட்சைப்புள்ளியாகும். எனவே இது அறிவோடு மாத்திரமன்றி "செய்ததையும்" அளவீடு செய்யும் பாடத்துறையாகும். நன்றாகப் புள்ளிகளைப் பெற்றால் புத்தகப் பூச்சிகளாக அல்லாமல் சிறந்த வினைஞர்களாகவும் சிறந்த நபர்களாகவும் திகழ முடியும்.

அதற்குப் பின்.... வெற்றிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பாதைகள் அதிகம்

(a) இப்பாடத்துறைக்குள் உயர்தரத்தில் சிறப்பாகச் சித்தியடைந்தால் உங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றுத் தொழில்நுட்பவியல் பட்டப்பாடநெறியைத் தொடர முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(b) பாடத்துறையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் விருத்தி அமைச்சினால் புதியதாக ஆரம்பிக்கப்படும் தொழில்நுட்ப பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு(University College) உள்வாங்கிக் கொள்ளப்பட முடியும். அங்கு நான்கு வருடங்களில் டிப்ளோமா, உயர் டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்பு போன்ற தகைமைகளை பெற்றுக் கொள்ள முடியும். அது தொழில் உலகம் தொடர்பான சிறந்த அறிவோடும் ஆற்றலோடும் கூடியதாகும்.

(c) இரத்மலானை இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரி, ஊருகொடவத்தை மோட்டார் வாகனத் தொழில் நிலையத்தில் அல்லது கட்டுநாயக்க பொறியியல் தொழில் நுட்பநிறுவனத்தில் கல்வியையும் பயிற்சியையும் பெற்றுக் கொள்ள முடியும். இவற்றில் கற்றுக் கொண்ட அநேகர் இன்று நமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் உயர் மட்ட அபிமானம் பெற்ற தொழில்னுட்பவியலாளர்களாகவோ அல்லது பொறியயலாளர்களாகவோ திகழ்கின்றார்கள்.

**இலங்கையில் தொழினுட்பக்கல்வியை வழங்குவதால் ஏற்படும் நன்மைகள்**

- தொழினுட்பக்கல்வியின் அறிமுகமானது வேலையுலகிற்கும் தொழினுட்பஉலகிற்கும் அறிமுகத்தை தருவதுடன் கல்விப்புலத்தையும் விரிவுபடுத்த உதவுவதாக அமையும்
- இதன் விளைவானது கற்றல் சாதனங்கள் கருவிகள் உத்திகள் மற்றும் உற்பத்திப்படிமுறைகள் பகிர்வு முழுமையான முகாமைத்துவம் என்பவற்றைத் தேடியாராய்வதாக அமைவதோடு செயன்முறைஅனுபவங்கள் மூலமாகக் கற்றல் செயன்முறைகளைப் பெறுமதிமிக்கதாக்குகிறது.
- இலங்கையின் பொதுக்கல்வியின் ஒரு மைல்கல்லான தற்போது பிரேரிக்கப்பட்டுள்ள உயர்தரதொழினுட்பத்துறையை அடையாளங் காணமுடியும்.
- இளைஞர்களின் வேலையின்மை விகிதத்தைக் குறைப்பதற்காக தொழினுட்பத்தையும் பொருத்தமான மென்திறன்களையும் கொண்ட சவால்களை எதிர்கொள்ளக்கூடியதாக இளைஞர்களை உருவாக்கமுடியும்




- மாணவர்கள் செயன்முறைஅறிவைப் பெறுவதுடன் சுலபமாக தொழில்வாய்ப்பை பெறக்கூடியதாக இருத்தல்

**புதிதாக தொழினுட்பப்பிரிவை ஆரம்பிப்பதற்கு பிரதான காரணங்கள்**

1. நாளாந்த வாழ்வில் பயன்படத்தக்க தொழினுட்ப அறிவு உடையவர்களை உருவாக்குதல்
2. பிரச்சினைகளுக்கு தொழினுட்பரீதியயான சிறந்த தீர்வைக் கண்டறிவோரை உருவாக்குதல்
3. மேலதிக தொழினுட்பஅறிவு கொண்டோரை உருவாக்குதல்
4. கலைத்துறையில் கற்கும் மாணவர் எண்ணிக்கையைக் குறைத்தல்
5. மேலதிகமாக தொழிற்றகமையை வழங்குதல்
6. எதிர்கால தொழிற்சந்தைக்கு தேவையானோரை உருவாக்குதல்

**தொழினுட்பப்பிரிவில் கற்பதால் கிடைக்கும் நன்மைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தொழில்நுட்பவியலில் இளமாணிப்பட்டத்தை(B.Tech) பெறலாம்
2. தொழிநுட்பக்கல்லுரி தொழிநுட்பப பல்கலைக்கழகம் போன்றவற்றில்NVQ தகைமையுடைய இளமாணிப்பட்டங்கள் மற்றும் டிப்ளோமா பட்டம் பெறலாம்
3. உயர்தரப்பரீட்சையில் சித்தி பெற்றாலும் பெறாவிட்டாலும் NVQ Level-3 சான்றிதழைப் பெறலாம்

**பல்கலைக்கழகங்களில் தொழினுட்பபிரிவில் அனுமதியை பெற்றுக்கொள்ளும் விதம்**

Engineering Technology, Bio systems Technology ஆகிய பாடங்களில் எழுத்துப்பரீட்சையில் 75% புள்ளிகளும் , செய்முறை பரீட்சையில் 25% புள்ளிகளும் பெற்று மூன்று பாடங்களிலும் சித்தி பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத்தகுதி பெற்ற மாணவர்களிடமிருந்து தெரிவு செய்யப்படுவார்கள்

பரீட்சையில் தோல்வியானாலும்........................வாழ்க்கையில் தோல்வி இல்லை.
யாதுமொரு காரணத்தினால் தொழிநுட்பப் பாடத்துறையை தெரிந்தெடுத்துப் பரீட்சையில் தோல்வி அடைகிறாரென்றால் அம்மாணவர் வாழ்க்கையில் தோல்வி அடைந்தவராகக் கருதப்படமாட்டார். ஏனெனில் அவர் பெற்றுக் கொண்டுள்ள பிரயோக அறிவுக்கு ஏற்ப திறன் விருத்தி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய தொழில் தகைமை (NVQ III) மூன்றாம் மட்டம் இம்மாணவருக்குக் கிடைக்கும் NVQ III சான்றிதழோடு பொருத்தமான தொழிலுக்குச் செல்வது இலகுவானதாகும். அவ்வாறின்றேல் NVQ IV பெற்றுக் கொள்வதற்காகதொழில்நுட்பக்கல்லூரி அல்லது பயிற்சி நிலையத்தில் அனுமதி பெற்று பதினெட்டு மாதங்களில் NVQ IV சான்றிதழைப் பெற்றுக் கொள்ள முடியும். அதன் பின் நேரடியாகப் பல்கலைக்கழகக் கல்லூரியில் (University College) இணைந்து கொண்டால் அங்கு தொழில் நுட்பப் பட்டத்தைப் (B.Tec.) பெற்றுக் கொள்ள முடியும்.

**எமது பிள்ளைகளுக்குப் புதிய உதயத்திற்கு வழி! எதிர்கால தொழிநுட்பவியலாளர்கள் நீங்களே!**

**திருமதி.S.சுபாஸ்**
**பகுதித்தலைவர்(தொழினுட்பபிரிவு)**

## வெற்றி

கருவினுள் உதித்து செல்வமாய் பிறந்து
இரண்டடி எடுத்து வைத்து
கல்வி எனும் வாழ்வில் நுழைந்து
வெற்றி கண்டாய்

வெற்றி என்ற மகுடம் சூட
இருளைப் பகலாய் மாற்றி
பயிற்சி எனும் முயற்சியிலே
வெற்றிப் பிறை அணிந்தாய்

யாரும் கற்றுத் தராத கலைகள் கற்று
எவரும் ஏறிட முடியாத மேடை ஏறி
சோதனை எனும் தேல்விகளைக் கடந்து
வெற்றி எனும் சாதனை புரிந்தாய்

யாரும் எட்ட முடியாத சிகரம் தொட்டு
வெற்றிக் கொடியை நாட்டி
பல்கலைக்கழகம் எனும் வாழ்வில் நுழைந்து
வெற்றி மகுடம் சூடினாய்.

**J.ஹனுஜா**
**2023 கலைப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்றம் தருபவர்

அழகிய எழில் சூழ்ந்து காணப்படுகின்ற ஆரம்பப் பாடசாலையில் அமீரதன் என்பவனின் முதலாவது பாடசாலை வரவேற்பு விழா நடைபெறவிருக்கும் நாளன்று அவன் பாடசாலைக்கு வரும் அந்த நாளன்று கண்களுக்குத் தெரியும் தூரம் வரைக்கும் வரிசையாக மரங்கள் பச்சை பசேல் என்ற வகையில் காட்சி தந்தது. அது மட்டுமல்லாது சிறிய அளவில் ஒரு மீன் தொட்டியும் அமைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் அவனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை மீன்களை தொட்டுத் தொட்டு விளையாடிக் கொண்டிருந்தான்.

அவனது அம்மா ராதா அவனது கைகளைப் பிடித்து எழுப்பி 'வா தம்பி' என்று அழைத்துக் கொண்டு மண்டபத்தினுள் சென்றார். அங்கு அதிபர், கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் மற்றும் அவர்களோடு பயில வந்திருக்கும் மாணவர்களும் அவர்களுடைய பெற்றோர்களும் அமர்ந்திருந்தனர். அவர்கள் அனைவரும் அமர்ந்திருக்கக் கூடிய அவ்வளவு பெரிய இடம் அது. அமீரதனும் ராதாவும் ஒரு கதிரையில் வந்து அமர்ந்து கொண்டனர். மேலும் பலர் வந்து கொண்டிருந்தனர். அங்கு நிகழ்ச்சிகள் பலவும் நடைபெற்று முடிந்தன. அவன் வீட்டுக்குப் புறப்படுகையில் அவனுக்குத் தேவையான புத்தகங்களும் பாடசாலையினால் வழங்கப்பட்டன.

அவன் அந்தப் புத்தகங்களை 'அம்மா தாங்க நானும் கொண்டு வாரன்' என்று ராதாவிடம் மழலை மொழியில் கேட்டான். அம்மாவோ ஒரு புத்தகத்தை கையில் கொடுத்து 'இந்தாங்க அமீரதன் கீழ விழுத்திடாம வடிவா பிடியுங்க' என்று சொல்லிக் கொடுத்தார். அமீரதன் அப்புத்தகமும் கையுமாகவே வீட்டிற்குச் சென்றான். அவன் அப்புத்தகத்தை விரித்துப் பார்க்கையில் அழகிய வர்ணம் தீட்டப்பட்ட படங்களும் பறவைகளும் நிறைந்ததாகக் காணப்பட்டது. அவனுக்கு மிக்க மகிழ்ச்சி ராதாவை அழைத்து 'அம்மா இங்க வந்து பாருங்க' என சமையலறையில் இருந்த ராதாவிடம் புத்தகத்தை காட்டி மகிழ்ச்சியடைந்தான்.

ராதாவோ அமீரதன் சிறந்த மாணவனாக வருவார் என கனவு காணத்தொடங்கினார். அடுத்த நாள் காலையில் ராதா எழுப்பியதுமே கண் விழித்த அமீரதன் 'அம்மா இன்றைக்கு நான் பாடசாலைக்குப் போகப் போகிறேன்' என்று ராதாவைக் கட்டித் தழுவியதும் சந்தோசம் தாங்க முடியாமல் புன்னகைத்த வாறே கட்டி அணைத்து பாடசாலைக்குரிய ஆயத்தங்களுடன் இருவரும் புறப்பட்டனர்.

பாடசாலையில் முதலாம் தரம் படிக்கும் மாணவர் தங்களது பெற்றோரை கட்டி அணைத்து வகுப்பறைக்குச் செல்ல முடியாமல் அழுதனர். ஆனால் அமீரதனோ புன்முறுவலுடன் அம்மாவை கட்டி அணைத்து கைகளைக் காட்டி விட்டு வகுப்பறைக்குள் நுழைந்தான். அவனையே பார்த்துக் கொண்டு நின்ற ராதா சிறிது நேரம் கழித்து வீட்டுக்குத் திரும்பினாள். மாணவர்களை வரவேற்றுக் கொண்டு அவர்களது வகுப்பாசிரியர் இருந்தார். மாணவர்கள் அனைவரும் வருகை தந்து சிறிது நேரம் கழித்து பாடம் கற்பிக்க ஆரம்பித்தார். முதல் நாளிலே ஒரு பாடலுடன் ஆரம்பித்தார். அது எல்லா மாணவர்களுக்கும் பிடித்திருந்தது. ஆசிரியருடன் சேர்ந்து மாணவர்களும் பாடி மகிழ்ந்தனர்.

எல்லா மாணவர்களுடனும் அமீரதன் நண்பனாகி விட்டான். ஆசிரியருக்கு ஒரு கவிதையும் தனது மழலை மொழியில் கூறி ஆசிரியரிடமிருந்து பாராட்டுப் பெற்றான். இவ்வாறு பாடசாலை நாட்கள் சந்தோசமாக நகர்ந்தன. அமீரதனின் ஆசிரியரின் பெயர் பிரமிளா. இவர் மாணவர்களுடன் தாயாகவும், தோழியாகவும்,சிறந்த ஆலோசகராவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த வழிகாட்டியாகவும் மட்டுமல்லாது ஏழைகளுக்கு உதவும் மனப்பாங்கு மிக்கவராகவும் திகழ்ந்தார். இவ்வாறு நாட்கள் பல நகர்ந்தன.

அன்றொரு நாள் உயர்தரம் கற்கும் மாணவி ஒருத்தி படிப்பதற்கு சிரமப்படுகிறாள் என்பதை அறிந்து கொண்டாள் பிரமிளா. அவளை அழைத்து வினவினாள். மாணவி ரீச்சர் எனக்கு படிப்பதற்கு சரியான புத்தகங்கள் இல்லை. மழை காலம் வந்து விட்டால் என் வீடு மொத்தமும் வெள்ளத்தால் அழிந்து விடும். அதில் சில புத்தகங்களை தவறி விட்டேன். எங்கள் வீட்டில் மின் ஒளியே இல்லை. விளக்கில் இருந்து தான் படிப்பேன். இப்போது மண்ணெண்ணை வாங்கவதற்குக் கூட வீட்டில் காசு இல்லை என்று அழுதவாறே கூறி முடித்தாள். தன்னையே மறந்தவராக ஆசிரியர் அவளைக் கட்டித் தழுவினாள்.

நீ கவலைப் படாதே நான் இருக்கிறேன் என்று கூறியவாறு தன் பையிலிருந்த பணத்தைக் கொடுத்து இதில் மண்ணெண்ணை வாங்கு பிறகு உனக்கான புத்தகத்தைப் பெற்றுத் தருகிறேன் என்றவாறாகக் கூறிப் புறப்பட்டாள். பின் நாட்கள் பல கழிந்தன. அன்று சிறுவர் தினமும் வந்தது. பிரமிளா அவரது வகுப்பு மாணவர்களுக்கு பரிசில்களைக் கொடுத்தார். மண்டபத்தில் விழா நடைபெற இருந்தது. அதற்கு அனைவரும் சென்றனர். மாணவர்களுக்கு அதிபரும் ஆசிரியர்களும் சிறுவர் தின வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

மேலும் சில மாணவர்களை அழைத்து பாராட்டி அவர்களை மேடை மீது பேச அழைத்தனர். அவர்களது வெற்றியினை அவர்கள் தமது ஆசிரியர்களுடனேயே பகிர்ந்து கொண்டனர். ஒவ்வொரு மாணவனையும் வழிப்படுத்துவதில் ஏதோ
ஒரு ஆசிரியர் பக்க பலமாக இருப்பார். என்பதனை அனைவரும் புரிந்து கொண்டனர். நல்லொழுக்கம் உள்ள மாணவன் எப்பொழுதும் தனது ஆசிரியருக்கு மதிப்புக் கொடுத்தே மகிழ்வான் என்பது உண்மையான கருத்தாகும்.


**R.கோபிகா**

**2023 கலைப்பிரிவு**

---

***தன்னம்பிக்கை***

தன்னம்பிக்கை என்பது ஒரு நாளில்
உதிர்ந்து விடும் பூவாக இருக்க கூடாது
ஒவ்வொரு நாளும் பூக்கும்
செடியாக இருக்க வேண்டும






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௐ பெண்ணியம்

வாழ்வு தரும் உலகமும் ஏன்
உடன் பிறந்தவர்களும், உயிர் தந்நதவர்களும் பெண் இனமே!
மகிழ் கொள்ளடி பெண்ணே....
உன் கருவில் உருவாய் பிறந்த ஒரு குரல் பெண்
எனின் புரிந்து கொள்ளடி பெண்ணே

உயர் நோக்கமும், உயர் கல்வியும் உன் வழிகளென்று
கனவு கொள்ளடி பெண்ணே
காலமும் உன் சேர் புகழ் நான்கு திசையும் பாடிட
பொறுமை கொள்ளடி பெண்ணே

மீண்டும் தோன்றும் தோல்விகள் உன் வெற்றிகளின் பாதைகள் என்று
வாய்மை கொள்ளடி பெண்ணே
உன் உரிமை கூறும் இடத்தை என்றேனும் எவன் முயற்சித்தான்
தீயாய் கொதித்தெழு பெண்ணே

பெண்ணில்லா ஒரு துறையையும் சுட்டிக் காட்ட
பெண்களின் அவதாரம் தான் எத்தனை
வாழ்வில் அந்நிலை சூழ்நிலைகளின் மகளாக, தாயாக, தாரமாக
ஆணும் பெண்ணும் சமமே இதை அறியாதவர்
அறியும் வரை உரக்கச் சொல்வதே
**பெண்ணியம்..........**

**R.ரக்சிகா**

**2023 கலைப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்

ஆசு(குற்றம்) களைபவர் ஆசிரியர் என்பார்கள். மாசற்ற மாணவர் சமூகத்தை மாண்புறச் செய்யவென உடல், பொருள், ஆவியை உவந்தளிப்பவரே ஆசிரியர். மாணவரின் மனவானில் சிறகடிக்கும் சிந்தனைகளை சீர் தூக்கிப்பார்த்து சரியானதைப் புரியவைக்கும் புனிதமான பணியே ஆசிரியப் பணியாகும்.

புதிது புதிதாய் வரும் சட்டங்களும் சம்பிரதாயங்களும் ஆசிரியர் பணியில் ஆதங்கத்தை ஏற்படுத்தினாலும் "ஆசிரியப் பணி அறப்பணி'' என்ற தாரக மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு உழைப்பவரே ஆசிரியர்.

ஆயிரம் சுமைகளோடும் எதிர்ப்பார்ப்புகளோடும் பள்ளிக்கு வரும் பிள்ளையின் பருவத்துப் பிரச்சினைகளை அணுகி அவனது மனதுக்கு மருந்திட்டு மாண்புயர் மாணவராக்கி மகிழ்பவரே ஆசிரியர்.

ஐந்து விரல்களைப் போல் ஆளுக்கொரு கோணத்தில் வரும் பிள்ளைகளுக்கு அன்னையாய் இருப்பதென்பது அவனியில் பெரும் சாதனைதான். ஊடகங்கள் ஒருபுறம், உதவாத சில சினிமாக்கள் மறுபுறம், உலகையே கையில் கொடுத்த கைபேசி இன்னொரு புறம். இவற்றுக்கும் மேலாக நாடி நரம்பை நலிவடையச் செய்து உயிரையே குடித்து உலக வாழ்வையே முடிக்கும் போதைப் பொருள் என எத்தனை கொடூரங்களை எதிர்த்துப் போராடி எதிர் நீச்சல் போட்டு உலகை வெல்லத் துடிக்கும் மாணவர்களின் எதிர்கால வாழ்வையே ஏந்திக் கொண்டு 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற உயரிய நோக்கோடு உழைப்பவரே ஆசிரியர்.

புரிதல் இல்லாத அதிகாரங்களும், நடைமுறைக்கு ஒவ்வாத புதுப்புது திட்டங்களும், காலாவதியாகிப் போன கட்டளைகளும், கடமைப்பட்டியல்களும் சுமையாக நின்று அழுத்தினாலும் தம்மையே நம்பி வரும் பிள்ளைகளின் எதிர் காலம் கருதி உண்மையாக உழைப்பவரே ஆசிரியர்.

புள்ளிகளுக்கு மாத்திரம் பிள்ளைகளை தயார் செய்து நடைமுறை வாழ்வில் பூச்சியமாக்கும் புதுமையான காரியத்தை செய்யாமல் இருப்பவரே ஆசிரியர்.

முதுகு வளைந்து முழந்தாளிட்டு வினாக்குறியாய் வளைபவரல்ல ஆசிரியர். முள்ளந்தண்டு நிமிர்த்தி பணிவோடு தலை சாய்த்து கனிவோடு பேசி முதுகு வளையாத அடுத்த தலைமுறையை உருவாக்குபவரே ஆசிரியர்.

கட்டுக்குள் வராத கட்டிளமைப்பருவத்து மாணவனையும் ஒழுக்கத்தால் கட்டிப்போட்டு உண்மையை உள்ளுணரச் செய்பவரே ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***வையாளி : 05***

தன் பணியின் தரம் பார்த்து தனக்கொரு விருது கிடைத்திடவே தானே விருதைக் கேட்டு வாங்கவேண்டிய விசித்திரமான பணியைச் செய்பவரே ஆசிரியர்.

நல்லாசிரியரை இனங்கண்டு!! அவருக்குத் தேடி வந்து விருது கொடுக்கும்? தகுதிபெறாத் தலைவர்கள் மத்தியில் தொண்டராக இருப்பவரே! ஆசிரியர்.

நள்ளிரவில் வரும் கட்டளைக்குப் பணிந்து நாள் முழுவதும் கடமையொன்றையே சுமந்து சொந்தக் குடும்பத்தின் சுகதுக்கம் மறந்து சில வேளை சுயத்தையும் இழந்து! செயற்பட்டு சுயமானமுள்ள மாணவ சமூகத்தை உருவாக்கத் துடிக்கும் விசித்திரமான பணி ஆசிரியப் பணியாகப் போய் விட்டதே!!

**திரு.வே.சுந்தரராஜன் SLTS. 1**

**BA , MA PG Dip.In.Edu**

**பகுதித்தலைவர்-10,11**

**தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி**

---

## ௐ <u>சமநீதியே வேண்டும்</u>

ஆரும் ஆருக் கடிமையில்லை !
அடிமைப்படுத்த விழைகின்ற
பேருக் கடிமைப்படுவதைப் போற்
பெரிய மடமை தனம் ஒன்றுமில்லை !

" ஆம் ஆம் " என நூறு
ஆம் போடும் வழக்கமதும்
ஓர் இனத்தாரின் ஆதிக்கம்
உலவும் உலகில் தேவையில்லை !

ஐயோ வென்றே அஞ்சுவதும்
ஐயா வென்றே கெஞ்சுவதும்
சரியாகுமா ?
சம தர்மம் தான் தரணியில்
அனைவருக்கும்

புவி மீது பொல்லாத ஆசை
கொண்ட மிருகங்களால்
மனிதர்க்கு என்றும் சங்கடந்தான் !

அடக்கியாள எண்ணுகிற
கொள்கை தான் தர்மம்
பொல்லா நோய் போன்று
முடங்கி போச்சே இன்றைக்கு

உலகில் குழப்பம் எதற்கு ?
பாரிற் கொந்தளிப்பு எதற்கு ?
எல்லார்க்கும் கிடைக்குமாயின்
**சமநீதி !**

**ம.நிவேதிகா**
**2023 கணிதப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ❦ நவீனத்துவத்தில் மிளிரும் பாரதி

**"இல்லை என்றால் இல்லாது போய்விட்டது என்று அர்த்தமில்லை காட்சியின் மயக்கமே அது"**

அன்றைய கால திண்ணை பற்றிய நினைவலைகள் மனதினில் அலைபாய்கின்றன. நம்மவர் வீட்டுத் திண்ணைகளும், வீடுகளும் இன்றில்லை. எத்தனையோ ஆயிரம் பேரிடம் அளவளாவியதில் இருந்து இப்பதில்கள் கிடைக்கப்பெற்றது. இதனை சற்று உற்று நோக்குகையில் இந்தப் பிரபஞ்ச புதிர்களில் இதுவும் ஒன்று என்பது காட்சிகளுக்கும், சிந்தைக்கும் புலப்படலாயிற்று. இன்னும் சற்றே சுவாரஸ்யமாக ஆராயலானேன் அதில் **"எதுவுமே இல்லாது போகவில்லை மாற்றங்கள் மட்டுமே நடந்தேறி வருவதை உணரக்கண்டேன்"** இவ் மாற்றங்கள் பழையதை காண்போருக்கு இல்லாதது போன்றதொரு மாயத்தோற்றத்தை புலப்படுத்தியிருந்ததை தெளிவாக விளக்கியது.

**" வேனிற் காலத்து நீர் கரைவது போன்று தோன்றினாலும் ஆவியாகி தொக்கி நிற்பது போல"**

மாற்றத்தைப் புனைந்த உருக்களும் ஆங்காங்கே தொக்கி நிற்கின்றன. பார்ப்பவர்களின் நோக்கை வைத்து தம்மை வெளிப்படுத்திக்கொள்ளவும் செய்கின்றது. சில சமயங்களில் வெளிப்படையாகவே மீட்சி பெறுவதுமாக இம் மாற்றங்கள் ஒரு தொடர்ந்தேர்ச்சியாக அரங்கேறிக்கொண்டிருக்கின்றன முற்று என்ற ஒன்றில்லாமலே.

**" இதன் போக்கு தானோ நவீனத்துவம் ? ? ? ? ? ? "**

நவீனத்துவம் என்பது சமூகத்தின் பல முகங்களிலும் வந்தமர்ந்து மாற்றங்களை கொண்டு வந்த காலகட்டமாகும். மறைந்து போனது வீடமைப்பு மட்டுமல்லாது மரபுகள், சிந்தனைகள், வழிமுறைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், அடக்குமுறைகள், பிறழ்வுகள், புதினங்கள் என்று இன்னும், இன்னும் எத்தனையோ. இவையாவும் உலுக்கப்பட்டு மாற்றமோ அல்லது குறைந்தபட்சம் நெகிழ்ச்சித்தன்மையிலாவது மாற்றத்தை நிகழ்த்தியிருக்கும்.

**" மாற்றத்தின் சிந்தனை நவீனத்துவம் பாரதியிலும் தீ பந்தமாய் கண்டு வியந்தேன்."**

நவீனத்துவத்தின் தாகம் இலக்கிய மற்றும் சமூக மரபுகள் தொடர்பான தன்னிலை நனவுகளும், சமூகத்தின் கூட்டு நனவுகளும் இலக்கியத்தின் பதிவுகளாக அரங்கேறத் தொடங்கிய காலம். தொடக்கத்தில் இயற்பண்பு வாதத்தை முற்றிலும் புறக்கணித்து நடப்பியலை நவீனத்துவத்தின் வெளிப்பாடாகக் கொண்டமைந்தது. பின்னர் நடப்பியலும் நவீனத்துவத்தின் வெளிப்பாட்டுக் கருவியாக இருக்கமுடியாது என்று கருதி படிமம், குறியீடு, அபத்தம், மிகையதார்த்தம், நேர்கோடற்ற கூற்று முறைமை என ஒவ்வொன்றையும் சோதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து பார்க்கலாயிற்று. ஒரு ஓவியம், கவிதை, கட்டிடம் முதலியவற்றை உருவாக்குவதில் பயன்படுத்தப்படும் செயன்முறைகளையும், பொருட்களையும் கவனத்திற்கு கொண்டுவந்து நுட்பங்களை லாவகமாக கையாள முற்படலாயிற்று. கடந்துவந்த காலத்து படைப்புக்களை மீண்டும் ஒழுங்கமைத்தல், ஒருங்கிணைத்தல், மறுபடியும் எழுதுதல், மறுபரிசீலனை திருத்தல், மற்றும் நகைச்சுவை ஆகியவற்றின் மூலம் நவீனத்துவ வெளிப்பாடுகள் முன்வைக்கப்படலாயிற்று. இத்தகையதான நவீனத்துவம் என்னும் சொல்நெறியைப் பற்றிய ஓரளவிலான புரிதல்களுடன் என் பிரியர் கவி பாரதியை இணைவைத்து நோக்கும் போது கவிதை மற்றும் உரை நடை எழுத்துக்களில் அவர் உருவாக்கிய அடையாளங்கள் குறித்து ஆராய்வது சாகரத்தில் நீந்துவது போன்றது. ஆதலால் ஒரு முனையின் சிறு அலையில் கைகளால் துழாவுகின்றேன் என் போக்கில்.

பாரதியின் கவிதைகள் மீதான காதல், கவர்ச்சி என்பது மாதம், நாள், சாதி பாகுபாடின்றி தமிழர்களின் வாழ்வியலுடனும், படைப்பாளிகளின் நவீனத்துவப் புனைவுகள் மீதும் இத்தருணம் வரை அதீத செல்வாக்கு செலுத்தியே வருகின்றது கண்கூடு. சமூக சுதந்திரம், தனிமனித சுதந்திரம், பெண்ணியம், விடுதலை வேட்கை, தமிழ்ப்பற்று, அறிவுநிறை முதலான பண்பு நலன்களை தனது முற்காலப் படைப்பாளிகளிடமிருந்து தள்ளி அகலக்கால் வைத்தே தனது கவிதைகளின் எடுத்துரைப்பை பாரதி முன்வைத்திருந்தார் என்றால் பொய்யில்லை. இவர் தம் படைப்புக்களை பாமரர் மேலோட்டமாக புரிந்து கொள்ளத்தக்கதாயும், உயிரிலக்கிய பரீட்சார்த்திகள் ஆழ்ந்த வியப்புணர்வுடன் நோக்கத்தக்கதாகவும் கவிதை ஜனநாயகத்தை ஏற்படுத்தியமையும் பாரதியின் உன்னதமான சாதனை எனலாம்.

**“ பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி**
**பேணி வளர்த்திடும் ஈசன்**
**மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல**
**மாதர் அறிவைக் கெடுத்தார்**
**கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி**
**காட்சி கெடுத்திடலாமோ ?**
**பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்**
**பேதமை யற்றிடும் காணீர் !!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற வரிகளில் கோலோச்சும் ஜனநாயகம் நவீன பெண்ணிய விவாதங்களில் இரண்டறக்கலக்கும் விதத்தில் பாரதியார் ஏற்படுத்தித் தந்த மொழிமை எந்தளவிற்கு சக்திவாய்ந்த வாக்குகள் என்பது புலனாகின்றன.

வெறுமனே ஓரிரு பாடல்களுக்குள் பாரதியாரின் மகிமையை எடுத்தியம்புவது அவ்வளவு சுலபமானதல்ல அவர் தம் 238 படைப்புகளின் மீதான விவாதத்தில் பாதிக்கு மேல் **"பாரதியின் நவீனத்துவம்"** என்ற பிரதான கூறில் தொடங்கி பல உப உள்ளடக்கங்களாக பாகுபடுத்தி சென்று கொண்டே இருக்கும். சமகாலத்தில் மேலைத்தேய கோட்பாடுகளான நவீனத்துவம், பின் நவீனத்துவ எழுத்தளர்கள் பல்வேறுபட்ட பரிசோதனைகள் மூலம் நாவல், சிறுகவிதை, நீள்கவிதை, குறுங்கவிதை என்று வெளியிடுகின்றனரோ அதே போல தனித்தொருவராக நின்று பாரதியார் தனது சமூகத்தின் மீதான அடக்குமுறைக்கெதிராகவும், அபத்தங்களையும் அழித்தொழிக்கும் ஆயுதமாகவும் கவி புனைந்து நவீனத்துவத்தினை சிறகடிக்கவைத்தார் என்றால் மிகையில்லை. இதனால் தான் **"நவீன கவிதையின் தந்தை நம் மீசைக்கவிஞன் பாரதி"** என்று இன்றும் புகழாரம் சூட்டுகின்றோம்.

மேலும் அடிமைச் சமூக மரபுகளும், பிரபுத்துவ பாரம்பரியங்களும், தனி மனித சுதந்திரத்தில் மிகவும் கொடூரமான தாக்குதல்களாக மேற்கொண்ட காலத்தில் இச் சவால்களுக்குள் இருந்து மக்களை எவ்வாறு மீட்கலாம் என்று மேன்மையான சிந்தை அவரை ஆட்கொண்டது. இதனால் தான் புதிதான ஆத்திச்சூடியை 20ம் நூற்றாண்டில் 111 அறிவுரைகளுடன் எளிதில் மனனஞ் செய்யக்கூடியதான சொற்றொடர்களாக உலகிற்கு படைத்தார். இது பன்முகத் தன்மைகளை ஆராயும் நவீனத்துவ நுட்பங்களை தன்னகத்தே நிறைத்திருந்தது. புதிய ஆத்திச்சூடி நீதிக்கருத்துக்களை மக்களுக்கு அறிவிக்கும் விதமாகவும், பிற்கால நீதி நூல்களில் தலையாயதும், முழுமையாக அறம் கூறுவதும், சிறுவயதில் இருந்து கற்ககூடியதான எளிமைத் தன்மைமிக்கதாயும், கல்வியுலகின் தொடக்க இலக்கியமாகவும், அரிச்சுவடி இலக்கியமாயும், தமிழ்நெடுங்கணக்கின் அமைப்பில் பாடப்பெற்றதும், அகர வரிசையை முறையாய் பின்பற்றியும், கட்டளை வாக்கியங்களாய் அமைந்ததும், சொற்கட்டு, சொல் அழுத்தம், ஓசையினிமை வாய்ந்ததாகவும் மாறிவருகின்ற தமிழ்ச்சமூகத்தின் காலக்கண்ணாடியாகவுந் திகழ்கின்றது. இது சமுதாய இலக்கியம் மட்டுமல்லாது கொள்கை இலக்கியமும் ஆகும் என்று புகழுரைகள் பல காணக்கிடக்கின்றன. இத்தனையும் நவீனத்துவத்தின் பால் வீறுகொண்டெழுந்த பாரதியின் தனித்துவங்களே. மேலும் இதன் காப்பு பகுதியில் பரம்பொருள் வாழ்த்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**" ஆத்திசூடி இளம்பிறை யணிந்து**
**மோனத்திருக்கும் முழுவெண் மேனியான்**
**கருநிறம் கொண்டு பாற்கடல் மிசை கிடப்போன்**
**மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்**
**ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்**
**உருவகத்தாலே உணர்ந்து உணராது**
**பலவகையாக பரவிடும் பரம்பொருள்**
**ஒன்றே ! அதனியல் ஒளியுறுமறிவோம்**
**அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்**
**அதனருள் வாழ்த்தி அமர வாழ்வெய்துவோம்"** என்பதில்

**"பிரபஞ்சப் பொதுமையை"** வலியுறுத்தி நின்றதென்னவோ நவீனத்துவத்தின் உச்சம் தொட்டு பின் நவீனத்துவமும் நுழைகின்றார் என்பதையே சுட்டிக்காட்டுகின்றது. இத்தனைச் சிறப்பும் பார்புகழ் நிலைக்கவன்றோ என்றால் பொய்யாகுமா? மேலும் நோக்கின் பாரதியின் வரிகளில் தார்மீகக் கடமையுணர்வு வேறுபட்டதாக அமைந்து நவீனத்துவம் காணவிழைகின்றமை குறிப்பிடத்தக்கது.

**" உண்மை முழுதும் உரைத்திடுவேன் - மேற்குலகத்தீர் !**
**பெண்மைக்கிரங்கிப் பிழை - பொறுத்தல் கேட்கிறேன்"**

என்ற குயில் பாட்டின் காதல் கதையில் பெண்மை என்ற கருப்பொருளை நிறுத்தி இங்குள்ள கொடுமைகளை நீங்களும் கேளுங்கள் என்ற சர்வதேச நீதிவழங்கல் முறைமை போல பல கவிதைகளைப் படைத்து நிகழ்கால தெளிவுப்படுத்துகை என்ற தொனியை காத்திரமாக ஒலிக்கச் செய்துள்ளார். அறிவுக்கும் அறியாமைக்கும் இடையிலான மக்களின் சிந்தனை ஊடாட்டம் மீது பாமர மக்களை மிக இலகுவில் சிந்திக்க வைத்த தன்னிலை உந்துகைகளை பாரதியை வெகுசன படைப்பாளனா? கல்வியியல் புனைவாளனா ? என்ற சிந்தனைகளை விமர்சகர்களிடையேயும் ஏற்படுத்தி விடுகின்றது. மேலும் தேசிய விடுதலை, பெண்மை, மொழிப்பற்று, காதல் என்ற நாற்பெரும் பிரிவுகளுக்குட்பட்டு பாரதியின் நவீனத்துவம் அடிமைத்தனத்தைக் கட்டுடைத்தல் என்ற கோட்பாட்டை தழுவியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இவரது படைப்புக்கள் விகாசம் பரந்த வெளிகளுக்கும், கலாசார திருபுகளின் உடைப்பாகவும் இருந்ததுடன் சமூக மாற்ற உணர்வை சந்த மாற்ற பொருட்சுவைகளுடன் வெளிப்படுத்தியதாலும் இன்று வரை பின்நவீனத்துவ காலத்தின் போக்கிலும் கொடிகட்டி பறக்க வைத்துள்ளது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை ஒரு இலக்கியவாதியாக காட்ட வேண்டும் என்ற முகாந்திரம் பாரதிக்கு ஒரு துளி கூட இருந்திருக்கவில்லை. அவரை ஒரு புனைவாளனாக்கியது அவர் வாழ்ந்த சமூகம் மட்டுமே. ஆனால் இன்று அவர் படைப்புக்களை ஆய்வுக்காக எடுக்கும் போது 20ம் மற்றும் 21 ம் நூற்றாண்டின் மரபு, நவீன இலக்கியவாதிகளின் படைப்புக்களில் பாரதியின் செல்வாக்கு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகத்தான் உள்ளது .

**"நமக்குத் தொழில் கவிதை" "நாட்டுக்குழைத்தல்..... இமைப்பொழுதும் சோராதிருத்தல்" "வேடிக்கை மனிதரைப் போலே நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ"** போன்ற ஒற்றை வசனங்கள் பொருள் பொதிந்த ஹைக்கூ வடிவங்களாகவும் உணரலாம். இத்தனை நவீனங்களை அடுக்கடுக்காய் புகுத்தி கவிதை நோக்காகக்கொண்டு இலக்கியச் சொல் நெறியை உருவாக்கிக் கொண்டார்.

**"சொல் புதிது**
**பொருள் புதிது**
**சோதி மிக்க – நவ கவிதை"**

என்றும் கவியை முன் வைத்த பாரதியில், நவ கவிதையின் வெளிப்பாடு என்பது நவீனத்துவத்தின் விளைவு என்பதை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். இறுதியாக பாரதியின் படைப்புகளில் தான் வாழ்ந்த காலத்தில் உலக உயிர்கள் யாவுமே ஒன்றென்ற கொள்கையில் வீரு நடை போட்டவராக நவீனம் புனைகின்றார்.

**" எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம்.........**
**எல்லோரும் இந்நாட்டு மன்னர் ஆம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்"**

என்று தனது இறுதிப்பாடலை முன்வைத்திருந்தார். ஒருநிலைச்சமூக சிந்தனையை நவீனத்துவ வடிவில் வீசியிருந்தார். 1921 இல் தன் இறுதிக் காலத்தில் ஒரு கவி வாழ்த்துக்கவியாக படைத்தார் நவீனத்துவம் மற்றும் பின் நவீனத்துவத்தில் மிளிரும் பாரதி.

**"நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ – பாரதியின் வழி"**

**திருமதி.I.அனுராஜா (ஆர்த்தி)**
**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

கல்லூரிக் காலம் எனும் பசுமையான, நெஞ்சை விட்டு நீங்காத நினைவுச் சாரல்களைச் சுமந்து, கல்விக்கடலின் முக்கிய தடைக்கல்லை தாண்டும் முயற்சிக்கு தயாராய், புதியதோர் உதயம் தேடி சிறகடித்து பறக்கவிருக்கும் இளம் சிட்டுக்களின் பிரியாவிடை நிகழ்வில் "வையாளி – 5" எனும் தொடர் சஞ்சிகையை செதுக்கி வெளியிடுவதில் அகமகிழ்ச்சி அடைகின்றேன்.

வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் புரவி வேகம் கொண்டு எழுந்துவரும் எமது கல்லூரியின் வெற்றித்தடமே வையாளி என்பதில் பெருமிதமடைகின்றேன். கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சாதனைகள் குவித்திடும் எமது மாணவர்களின் சரித்திரங்கள் ஆவணமாக்கபப்ட வேண்டியது அவசியமானதாகும். இதன் ஒரு பகுதியாக வையாளி இருப்பதையிட்டு மகிழ்சியடைகின்றேன்.


**"வையாளி" எனும் இந்த சஞ்சிகைக்கு வித்திட்ட எமது கலலூரியின் முதல்வர் திரு.க.ரவிதாஸ் அவர்களுக்கு "வையாளி – 5" இதழாசிரியர் என்ற வகையில் முதற்கண் நன்றியைக் கூறிக்கொள்வதில் பெருமிதமடைகின்றேன்.**

"வையாளி – 5" என்ற இந்தச் சஞ்சிகை பிறப்பதற்கு முழுப்பங்களிப்பினையும், உதவிகளையும், ஆலோசனைகளையும், புகைப்படங்களையும், அட்டை வடிவமைப்பிற்கும் உதவி வழங்கிய மதிப்புக்குரிய கல்லூரியின் அதிபர் திரு.க.ரவிதாஸ் அவர்கட்கும் மற்றும் பிரதி அதிபர், உதவி அதிபர்கள் மற்றும் ஆக்கங்களை வழங்கிய ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதில் பெருமகிழ்சி அடைகின்றேன்.

சஞ்சிகையை தொகுத்து, தட்டச்சிட்டு முழுவடிவம் கொடுத்த ஆசிரியர் திருமதி. தமயந்தி கெங்காதரன் அவர்கட்கும், மற்றும் தரவுகளையும் திருத்தங்களையும் வழங்கி சஞ்சிகையை மெருகூட்டிய ஆசிரியர் திரு.மோகன்ராஜ் அவர்கட்கும், அச்சிட்டு வழங்கிய *SS Digitals* பதிப்பகத்தினருக்கும் மற்றும் அனைவருக்கும் உளம் கனிந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்

**நன்றி**

**இவ்வண்ணம்**
**செல்வி.G.கோபிகா**
**இதழாசிரியர்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















SS Digital's 0777 695 636

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org